
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருச்சியில் 105 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக திருச்சியில் செவ்வாய்க்கிழமை (ஏப். 8) 105 டிகிரி வெயில் பதிவானது.

இதேபோல, சென்னை, தருமபுரி, மதுரை, சேலம், திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் அளவு

(டிகிரி பாரன்ஹீட்டில்):

திருச்சி, திருப்பத்தூர் (வேலூர்) - 105

கரூர் பரமத்தி - 104

தருமபுரி, மதுரை, சேலம், வேலூர் - 103

சென்னை மீனம்பாக்கம் - 100

கோவை - 99

பாளையங்கோட்டை - 98

சென்னை நுங்கம்பாக்கம் - 95

கொடைக்கானல் - 71

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

**சென்னை,**

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் புதன்கிழமை (ஏப். 9) மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கி, கடுமையான வெயில் வாட்டி வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள வெப்பசலனத்தின் காரணமாக ஒரு சில இடங்களில் மழை பெய்யும். குறிப்பாக கோவை, திண்டுக்கல், கன்னியாகுமரி, ராமநாதபுரம், தேனி, திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் புதன்கிழமை (ஏப்.9) மழை பெய்ய வாய்ப்புள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணிநேரத்தில் சங்கரன்கோவில் பகுதியில் 40 மி.மீ. மழை பெய்துள்ளது. ஆயக்குடி, நிலக்கோட்டையில் 20 மி.மீ. மழையும், கமுதி, வால்பாறை, தென்காசி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. இந்த தகவலை சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 48.96 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 48.96 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 228 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 4.1 டி.எம்.சி.

**கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றமில்லை**

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 63 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.42, சென்னையில் ரூ. 2.75.

**இளநீர், தர்பூசணி விற்பனை அமோகம்**

**திருவள்ளூர்,**

திருவள்ளூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கோடை வெயிலின் உக்கிரத்தைத் தணிக்கும் இளநீர், தர்பூசணி ஆகியவற்றின் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் ஏப்ரல் முதல் நாளிலிருந்தே கடுமையான வெப்பம் மக்களை வாட்டி வருகிறது.

மேலும் சாலைகளில் செல்லும் வாகன ஓட்டிகளும் கடுமையான அனல் காற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் நெடுஞ்சாலைகளில் பகல் 12 மணியிலிருந்து மாலை 4 மணிவரை வாகனப் போக்குவரத்தும் குறைவாகவே உள்ளது.

இந்நிலையில் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் இளநீர், தர்பூசணிப் பழம், கிர்னி பழங்கள் ஆகியவை விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சாத்துக்குடி ஜூஸ், சர்பத் போன்றவையும் பொதுமக்களின் தாகத்தைத் தணிப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றன.

திருவள்ளூரில் விற்கப்படும் நாட்டு இளநீர் எனப்படும் உள்ளூர் இளநீர் ரூ.20-க்கும், பொள்ளாச்சியில் இருந்து வரவழைக்கப்படும் இளநீர் ரூ.25 முதல் ரூ.40 வரையிலும் விற்கப்படுகின்றன.

அதேபோல் தர்பூசணி பழம் சிறியது ரூ.40 முதலாக பெரிய பழம் ரூ.80 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. கிர்னி பழம் கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## குலசேகரம், திருவட்டாறு பகுதியில் பலத்த மழை: வெப்பத்தின் தாக்கம் குறைந்தது குலசேகரம்,

குமரி மாவட்டம் குலசேகரம், திருவட்டாறு பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக மழையின்றி கடும் வெயில் அடித்து வருகிறது. மழையின்மையால் தென்னை, வாழை, மரச்சீனி, ரப்பர் உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து வருகின்றன. அணைகள், குளங்கள், கிணறுகளில் தண்ணீர் மட்டம் தாழ்ந்து, வறண்ட நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழை மாவட்டத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் பெய்தாலும், ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில் வெப்பம் தணிந்து மிதமான காலநிலையை உருவாக்கியுள்ளது.

குலசேகரம் பகுதியில் மழை: செய்வாய்க்கிழமை மாவட்டத்தில் பேச்சிப்பாறை, சிற்றாறு, பெருஞ்சாணி, திற்பரப்பு, குலசேகரம், திருவரம்பு, திருவட்டாறு உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்தது. அருமனை உள்ளிட்ட இடங்களில் லேசான சாரல் மழை பெய்தது.

இந்த மழையின் காரணமாக இப்பகுதிகளில் வெப்பம் தணிந்தது. மேலும், காய்ந்து கிடந்த வாழை, தென்னை, மரச்சீனி, ரப்பர் உள்ளிட்ட தோட்டப்பயிர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஒழுகும் பஸ்களில் மக்கள் அவதி: மாவட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களான திருவட்டாறு, திங்கள்நகர், குளச்சல், மார்த்தாண்டம் உள்ளிட்ட பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் பஸ்கள் பெரும்பாலும் ஓட்டை உடைசலாக இருப்பதால் இந்த மழையின் காரணமாக இவற்றில் பயணம் செய்த பயணிகள் கடும் அவதிக்குள்ளானதைக் காணமுடிந்தது.

**ஸ்ரீவைகுண்டத்தில் பலத்த மழை**

**சாத்தான்குளம்,**

ஸ்ரீவைகுண்டத்தில் செவ்வாய்க்கிழமை 2 மணிநேரம் பலத்த மழை பெய்தது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஸ்ரீவைகுண்டம் பகுதியில் கடந்த சில நாள்களாக கடுமையான வெயில் தாக்கம் இருந்து வந்தது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமம் அடைந்து வந்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை ஸ்ரீவைகுண்டத்தில் திடீரென மழை பெய்தது.

இந்த மழை நண்பகல் 12 மணிக்கு தொடங்கி 2 மணிவரை தொடர்ந்தது. இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் இப்பகுதியில் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. இதனால் பொதுமக்கள் மற்றும் முன்கார்சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கடலில் வீணாகும் பாசன நீர்!**

**கடலூர்,**

பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் மண் மேவி கிடக்கும் குள்ளஞ்சாவடி அருகேயுள்ள பெருமாள் ஏரியில் முழுமையாக மழைநீர் தேக்கிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏரிக்கு வரும் நீர் கடலில் வீணாகக் கலந்து வருகிறது. இந்த ஏரியை தூர்வாரி நீர்கொள்ளளவு பரப்பை அதிகப்படுத்த வேண்டும் என கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று பெருமாள் ஏரி. குள்ளஞ்சாவடி அருகேயுள்ள இந்த ஏரியின் பிரதானக் கரை 16 கி.மீட்டரும், எதிர்

கரை 16.80 கி.மீட்டரும் நீளம் கொண்டது. ஏரியின் முழுக் கொள்ளளவு 574 மில்லியன் கன அடி. 11 பாசன வாய்க்கால்கள் மூலம் 6,503 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. ஏரியில் 2 கலிங்குகள் மற்றும் உபரி நீர்போக்கிகள் உள்ளன.

ஏரிக்கு என்எல்சி சுரங்கங்களிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் மற்றும் வாலாஜா ஏரி உபரி நீரும் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது.

என்எல்சி சுரங்கங்களில் இருந்து வெளியேற்றப்படும் கரித்துகள்கள் மற்றும் களிமண்ணால் ஏரி பெருமளவுக்கு தூர்ந்து கிடக்கிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்குப் பருவமழை காலத்தில் விரைவில் நிரம்பி வழிந்துவிடும் நிலையில் ஏரி உள்ளது.

இதனால் சம்பா பட்டத்தில் பயிர் நடவு செய்தவுடன் தண்ணீரில் மூழ்கி வீணாக வாய்ப்பு இருப்பதால், விவசாயிகள் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் விவசாயம் செய்வதில்லை.

ஏரியில் உள்ள 11 பாசன வாய்க்கால்களின் கரைகளை உயர்த்தவும், உபரி நீர்போக்கி கரைகளை உயர்த்தவும் கடந்த ஆண்டு ரூ.29.73 கோடி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஏரியை கடந்த ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் ஆய்வு செய்தார். ஆனால், பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இதுகுறித்து விவசாய சங்கப் பிரதிநிதி பி.ரவீந்திரனிடம் கேட்டபோது, பெருமாள் ஏரியில் சராசரியாக 5 அடி வரை மண் படிந்துள்ளது. தமிழகத்தில் பல கிராமங்களில் குடிப்பதற்கு கூட தண்ணீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஆனால், தண்ணீரை சேமித்து வைக்க வாய்ப்பு இருந்தும், நீர்பிடிப்புப் பகுதிகள் மண் மேடாகி போனதால், வடகிழக்கு பருவமழைக் காலத்தில் விரைவில் அணை நிரம்பி தண்ணீர் கடலில் வீணாக கலக்கிறது.

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 3 டிஎம்சி தண்ணீர் வீணாக கடலில் கலந்துள்ளது. கடலூர் மக்களவைத் தொகுதியில் முக்கியம் வாய்ந்த இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றார்.

**விவசாய ஆராய்ச்சி படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க இன்று கடைசி**



புதுதில்லியிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி படிப்பில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

வழங்கப்படும் படிப்பு: Ph.D Programmes

பிரிவுகள்: 1.Agricultural Engineering at CIAE, Bhopal 2. Horticulture and Post Harvest, Technology at H.H.R. Bengaluru

தகுதி: முதுகலை பட்டப் படிப்பில் 60 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இறுதியாண்டு தேர்வு எழுதுபவர்களும் விண்ணப்பிக்கலாம். முழு விபரங்களை தெரிந்து கொள்ள தகவல் குறிப்பேட்டைப் பார்க்கவும்.

விண்ணப்பிக்கும் முறை: wwww.iari.res.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். ஆன்லைனில் விண்ணப்பித்த பிறகு அதனை பிரிண்ட்அவுட் எடுத்து அதனுடன் இணைத்து அனுப் வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க ஏப்ரல் 9 கடைசி நாள். பிரிண்ட்அவுட் உடன் டிடியை இணைத்து அனுப்ப கடைசி நாள் ஏப்ரல் 16. நுழைவுத்தேர்வு ஜூன் 6ம் தேதி நடைபெறுகிறது.

கூடுதல் தகவல்களுக்கு இணையதளத்தை பார்க்கலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென்னைக்கு நீர் மேலாண்மை



இன்று தமிழ்நாட்டில் தென்னை மகசூல் குறைந்து வருகிறது. விவசாயிகள் தென்னை மரங்களை சரிவர பராமரிப்பதில்லை. பலர் சரிவர உரம் போடாமல், மரங்களை பழுது பார்க்காமல், நீர் மேலாண்மை பற்றி அறியாமல் உள்ளனர். இதுவே மகசூல் குறைவுக்குக் காரணம்.

**நீர்ப்பாசனம், சரியான தருணத்தில் ஏன் தேவை?**

* தென்னை மட்டைகள், குலைகள் திடகாத்திரமாக இருக்க...

* இரசாயன மாற்றங்கள் நடந்திட

* வெப்பத்தை சமநிலையில் வைத்திட

* ஒளிச்சேர்க்கை நடைபெற

* தேவையான பயிர் உணவுகளை மண்ணில் இருந்து கரைந்த நிலையில் கிரகிக்க மழை இல்லாத காலங்களில் நீர்ப்பாசனம் தேவை.

**நீரின் அவசியமும், வேரின் அமைப்பும்:** வேரின் அமைப்புக்களை நன்கு தெரிந்து கொண்டு நீர் பாய்ச்ச வேண்டும். மர 90% வேர்கள் 2 மீட்டர் ஆர வட்ட பரப்பளவிற்குள் அதாவது 12.5 ச.மீ. உள்ளேயே காணப்படும். 15 மீ ஆழம் வரை 4000 முதல் 7000 வேர்கள் சம மட்டத்தில் அமைந்திருக்கும். தென்னை நட்ட முதல் வருடம் ஒருநாள் விட்டு ஒருநாள் 10 லி தண்ணீரும், மூன்று வயது வரை வாரம் இருமுறை 40லி தண்ணீரும், பின் வாரம் 60லி தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். 2 மீட்டர் ஆர வட்டப்பகுதிக்கு மட்டும் நீர் பாய்ச்ச வேண்டும்.

வட்டப்பாத்தி முறை, பானைவழி நீர்ப்பாசனம், சொட்டுநீர்ப்பாசனம் ஆகிய முறைகளில் நீர்ப்பாசனம் செய்யலாம். சொட்டு நீர் குழாயின் மூலம் உரம்

செலுத்தப்படுவதால், இம்முறை சிறப்பானது. மணற்பாங்கான நிலத்திற்கு வண்டல், குறைத்து பொருக்கு மரத்திற்கு 200 கிலோ இடலாம். பசுந்தாள் உரம், நார்க் கழிவுகள், மக்கிய எரு இட்டால் நீர்ப்பிடிப்பு அதிகரிக்கும். மண்ணின் ஈரப்பதத்தை பராமரிக்க வேண்டும்.

மழைக்கால தொடக்கத்தில் தோப்புகளை உழவு செய்ய வேண்டும். நல்ல வடிகால் வசதி தென்னைக்கு அவசியம். காரணம் வடிகால் இல்லாவிடில் தண்ணீர் தேங்கி விடும். நீரும் உரமும் சரிவர விஞ்ஞான முறைப்படி வழங்காவிடில் மகசூல் குறைந்து விடும்.

கீழ்க்கண்ட வலைத்தளங்கள் மூலம் தென்னை நீர் மேலாண்மை பற்றி தெளிவாக அறியலாம்.

www.cdb.org., www.tnau.ac.in., www.icar.nic.in.

**- எம்.ஞானசேகர்,**

**விவசாய ஆலோசகர்: 93807 55629**

**சின்ன சின்ன செய்திகள்**



**உளுந்து - மதுரை 1 :** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உளுந்து பயிரைத் தாக்கும் மஞ்சள் நோயைத் தாங்கி வளரும் இயல்புடைய வம்பன் 1, வம்பன் 2, வம்பன் 3, வம்பன் 4, வம்பன் 5, வம்பன் 6, உளுந்து கோ 6 ஆகிய இரகங்களை ஏற்கெனவே வெளியிட்டுள்ளது. விளைச்சலில் சாதனை படைத்த உளுந்து கோ 6 இரகத்தை விட அதிக விளைச்சலைத் தரும் மதுரை-1 இரகத்தை இந்த ஆண்டு வெளியிட்டுள்ளது.

இந்த புதிய உளுந்து இரகம், எக்டருக்கு 700 கிலோ விளைச்சலைத் தரும். மேலும் உளுந்தின் மாவு பொங்கும் தன்மையைக் கொண்டது. உளுந்து விதைத்த 70 முதல்

75 நாட்களில் அறுவடைக்கு தயாராகும். மஞ்சள் தேமல் நோய், களப்புழு தாக்குதலைத் தாங்கி வளரும் இயல்புடையது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர் தவிர) பயிரிட ஏற்ற இந்த இரகம் வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரத்தில் சோதனை முறையில் பயிரிட்ட போது எக்டருக்கு அதிக விளைச்சலாக 1679 கிலோ கொடுத்துள்ளது.

**தீவனச்சோளம் - கோ.31 :** இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு புதிய துறை 1976ம் ஆண்டு த.வே.ப.கழகத்தில் உருவாக்கப்பட்டது. இந்த துறையின் மூலம் கம்பு நேப்பியா ஒட்டுப்புல் கோ. (சி.என்) 4, கினியா புல் கோ (ஜி.ஜி) 3, மறு நாம்பு தீவனச் சோளம் கோ (எப்எஸ்) 29 ஆகிய இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது இந்த ஆண்டு தீவனச்சோளம் கோ.31 இரகம் வெளியிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் பயிரிட ஏற்ற இந்த இரகம் கோ.29 இரகத்தை விட 15 சதம் கூடுதல் தீவன விளைச்சலைத் தரும் இயல்புடையது. அதிக எண்ணிக்கையில் தூர்கள், அகன்ற இலைகள், விதை உதிராத தன்மையுடன் விரைவாக தழைக்கும் திறன், குறைந்த அளவு நச்சுப் பொருட்கள் (நார்ச்சத்து 19.8 சதம்), புரதம் 19.86 சதம் ஆகியவை இந்த இரகத்தின் சிறப்பியல்புகளாகும்.

கறவைமாடுகள், ஆடுகள் விரும்பும் சுவையுள்ள இந்த இரகம் 190 டன் முதல் 227 டன் வரை பசுந்தீவன விளைச்சலைத் தரவல்லது. இதன் உலர் எடை விளைச்சல் 49.73 டன் ஆகும். இந்த இரகத்தை ஆண்டுக்கு 6 முதல் 7 முறை அறுவடை செய்து பயன்பெறலாம்.

**நானோ துகள் தொழில்நுட்பம்:** விவசாயி நஞ்சுக்குட்டி அடிக்கட்டை கரும்பை பொங்கலுக்கு வெட்டியுள்ளார். கிளையிட்ட கரும்பு (3 1/2 மாதம்) வளர்ந்து வெட்டுவதற்குத் தயாராக இருப்பது போல் மத மதவென்று வளர்ந்துள்ளது. இந்த அபரிமிதமான வளர்ச்சிக்குக் காரணம் நானோத் துகள் தொழில்நுட்ப கரைசல் தான். 1 தூரிலிருந்து 6 கரும்புகள் வந்துள்ளன. இப்ப, 6 மறுபடி புடைச்சிருக்கு. 3 தடவை நானோ கரைசல் ஸ்பிரே பண்ணியிருக்கார் விவசாயி.

10 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டரை கரைத்துத் தெளித்து வருகிறார் விவசாயி. கரைசலில் கொஞ்சத்தை கரும்பில் தெளித்து விட்டு மீதியை வேலி மசாலுக்குத் தெளிக்கிறார். தென்னைக்குத் தனியாகத் தெளிக்கிறார். கடந்த வருடம் ஆண்டிற்கு 120 காய்கள் 1 மரத்திலிருந்து கிடைத்துள்ளது. நானோ தெளிப்பிற்கு பிறகு இது 150 காய் வரை உயரலாம் என்று கணிக்கிறார் விவசாயி. நானோ தெளிப்பிற்கு

பிறகு, தேங்காய் வெயிட் கூடுவதாக உணர்ந்துள்ளார். முன்பெல்லாம் 400-500 கிராம் தான் தேங்காய்கள் வெயிட் இருக்கும். இப்ப நானோ துகள் கரைசல் தெளித்த பிறகு 560 கிராம் வரை எடை வருவதாக கூறுகிறார் விவசாயி. மல்பெரியை பொறுத்தவரை பசபசவென்று பளபளப்பு மாறாம அப்படியே இருக்கு. மேலும் விவரங்களுக்கு (விவசாயி கூ.ஓ.நஞ்சுக்குடா (எ) ராசு, தென்னைநல்லூர் போஸ்ட், தொண்டாமுத்தூர் (வழி), கோவை-641 109) மற்றும் புரபசர் ராஜசேகரன், செல்:9380954559.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## பயறு வகைப் பயிர்களுக்கு ஊட்டச்சத்துக் கரைசல்

பயறு வகைகளில் புரதச்சத்து (20-24 சதம்) இருக்கின்றது. புரதச்சத்தின் மாற்றத்திற்கு மணிச்சத்து அவசியம். மணிச்சத்து மண்ணிலிருந்து கிடைப்பதை விட இலை வழியாக எளிதாக கிடைக்கிறது. மேலும் பயிர்கள் பூக்கும் பருவத்திற்குப் பிறகு வேர்களில் ஊட்டச்சத்து எடுக்கும் தன்மை குறைந்து விடும். இத்தகைய நிலை நெல்தரிசு பயிர்களில் காணப்படுகிறது. ஆகையால் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து கொண்ட டிஏபி கரைசலைத் தெளிப்பதன் மூலம் இலை வழியாக இவை உள்ளே சென்று பயனளிக்கிறது. பூக்கள் பூத்தபின் இலைகளில் உற்பத்தியாகும் மாவுச்சத்து விதையில் சேமிக்கப்படுகிறது. யூரியா வழியாக கிடைக்கும். தழைச்சத்து இலைகளைப் பச்சையாக வைத்திருந்து அதிக மாவுச்சத்து உற்பத்திக்கு உதவி செய்கிறது. பொட்டாஷ் உரம் இடுவதால் பயிரில் பூச்சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. மணியின் எடையைக் கூட்டுகிறது. பிளோனோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கி பூ பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்க அதிக காய்கள் பிடிக்க உதவுகிறது.

டிஏபி, யூரியா, பொட்டாஷ் மற்றும் பிளோனோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கி ஆகியவற்றின் கலவை தயார் செய்து தெளிப்பதன் மூலம் கூடுதல் விளைச்சலையும் லாபத்தையும் பெறலாம். இதற்கு ஒரு ஏக்கருக்கு தேவையான டிஏபி 4 கிலோ, யூரியா 2 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் பிளோனோபிக்ஸ் 185 மில்லி ஆகியவை ஆகும். அவற்றுள் டிஏபி உரத்தை முதல் நாள் மாலையில் 10 லிட்டர் நீரில் ஊறவைத்து மறுநாள் அதன் தெளிந்த நீருடன் 190 லிட்டர் நல்ல நீர், யூரியா, பொட்டாஷ் பிளோனோபிக்ஸ்ஆகியவற்றை கரைத்து 200 லிட்டர் தெளிப்புக்

கரைசல் தயார் செய்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். விதைத்த 25-30 நாளில் (பூக்கும் தருணத்திலும்) பின்பு 15 நாட்கள் கழித்தும் (40-45 நாள்) இருமுறை தெளிக்க வேண்டும். இக்கரைசலைத் தெளிக்க சரியான நேரம் மாலைப்பொழுதுதான். ஏனென்றால் கரைசல் இலைப்பரப்பில் இருக்கும் இலைத்துளை வழியாக உள்ளே செல்ல முடியும். கரைசல் காய்ந்து விட்டால் உள்ளே செல்லாது. எனவே வெயில் நேரத்தில் தெளிக்கக் கூடாது. அதேபோல் இலைகளில் அடிப்பக்கம் கரைசல் நன்றாகப் பரவ வேண்டும் என்பதற்காகக் கைத்தெளிப்பான் மூலம் தெளிப்பது நல்லது. தேவைக்கு அதிகமான டிஏபியை அதாவது இரண்டு சதத்திற்கு மிக அதிகமாக இருக்குமாறு கரைத்து உபயோகித்ததால் இலைகள் கருகிவிடும். ஆகையால் பரிந்துரை செய்யப்பட்ட அளவை மட்டும் உபயோகிக்க வேண்டும்.

**முனைவர். கொ.பாலகிருஷ்ணன்,**
**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**மதுரை-625 104.**

## அண்டை மாநிலங்களில் வறட்சி: தமிழகத்தில் அரிசி விலை உயரும்

ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் கடும் வறட்சி நிலவுவதால், தமிழகத்தில் அரிசி விலை உயர்ந்து வருகிறது.

தமிழகத்தில், கடந்த ஒரு வாரமாக அரிசி விலை, கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. பொன்னி புழுங்கல் மற்றும் பச்சரிசி விலை கிலோவுக்கு, மூன்று ரூபாய் வரை உயர்ந்துள்ளது. கடந்தாண்டு, தீபாவளி வரை அரிசி விலை உயரவில்லை. பருவமழை தவறியதால், பல இடங்களில் நெல் விளைச்சல் இல்லை. வட மாநிலங்களில் இருந்து வரும், 'கிராந்தி' என்ற நெல், குறைந்த அளவே வந்துள்ளது. மொத்த சந்தையில், பி.பி.டி. 1 கிலோ 43 ரூபாய்க்கும், பழைய அரிசி 48 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. வெள்ளை பொன்னி புது அரிசி 1 கிலோ 48 ரூபாய்க்கும், பழைய அரிசி 54 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. கர்நாடகா டீலக்ஸ் அரிசி 48 முதல், 50 ரூபாய் வரையும், கிராந்தி (இட்லி) அரிசி 35 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. கர்நாடக, ஆந்திர மாநிலங்களில் இருந்து வரும், பொன்னி பச்சரிசி 1 கிலோ, 53 ரூபாய்க்கு விற்பனையானது; தற்போது, கிலோவுக்கு மூன்று ரூபாய் வரை அதிகரித்துள்ளது; 50 கிலோ மூட்டைக்கு, 150 ரூபாய்

அதிகரித்துள்ளது. சேலம் அரிசி வியாபாரிகள் கூறுகையில், 'கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் மழை பெய்யவில்லை. மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகளும் இல்லாததால், அரிசி விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளது' என்றனர்.

**சூறாவளி காற்றால் வாழை மரங்கள் சாய்ந்தன: வேதனையில் திண்டுக்கல் விவசாயிகள்**




**திண்டுக்கல்**: திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் விவசாயிகள் பயிர் செய்யவே முடியாத நிலையில், ஒரு சில இடங்களில் நல்ல நிலையில் இருந்த வாழைகளும், நேற்று முன் தினம் அடித்த சூறாவளி காற்றுக்கு அடியோடு சாய்ந்ததால், விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

திண்டுக்கல் ஏ.வெள்ளோடு, மூர்த்திநாயக்கன்பட்டி உட்பட பல இடங்களில் நேற்று முன்தினம் இரவு 7மணிக்கு திடீரென சூறாவளி காற்றுடன் தூறல் மழை பெய்தது. இதில், இந்த பகுதியில் கிணற்று பாசனம் மூலம் பயிரிடப்பட்டு இருந்த 15 ஏக்கர் வாழை மரங்கள் சாய்ந்து விட்டன. இதனால் விவசாயிகள் வறண்டும் கெடுத்த இயற்கை, சூறாவளி காற்றாலும் நாசமாக்கி விட்டதாக வேதனையில் தவிக்கின்றனர். இது குறித்து, மூர்த்திநாயக்கன்பட்டியை சேர்ந்த விவசாயி பி.கண்ணன் கூறியதாவது: மழை இல்லாததால், கிணற்று பாசனத்தில் 14 மாதமாக நீரை பாய்ச்சி வாழையை வளர்த்தேன். கற்பூரவல்லி இன்னும் 15 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். உரமிட்டு, பூச்சி மருந்து தெளித்து பராமரித்த கூலி கூட எங்களுக்கு கிடைக்கவில்லை. பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசு நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

**ஆர்வம் ! : கம்மாபுரம் விவசாயிகள் சவுக்கு பயிரிட... : தண்ணீர் தட்டுப்பாட்டால் மாற்று ஏற்பாடு**

**கம்மாபுரம்:** கம்மாபுரம் பகுதியில், கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய பருவ மழையின்மை காரணமாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், பாசனத்திற்கு போதிய தண்ணீரின்றி நெல், கரும்பு பயிர் செய்த விவசாயிகள் சவுக்கு பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆண்டுதோறும் பருவமழையின் போது, மணிமுக்தாறு, வெள்ளாறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். இதனால் விருத்தாசலம், கம்மாபுரம் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, இப்பகுதி விவசாயிகள், போர்வெல், கிணற்று பாசனம் மூலம் கரும்பு, நெல் உட்பட பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வந்தனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய பருவ மழை பெய்யாததால், மணிமுக்தாறு, வெள்ளாறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படவில்லை. தற்போது தண்ணீரின்றி வறண்டு கிடக்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் பெய்த குறைந்த பருவமழையினால் விருத்தாசலம், கம்மாபுரம் பகுதிகளில் ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் ஓரளவு நிரம்பினாலும், ஓரிரு மாதங்களில் வற்றிவிட்டன. மேலும், என்.எல்.சி., விரிவாக்கப் பணி காரணமாக கம்மாபுரம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது.

நிலத்தடி நீர் மட்டம் குறைவு, மின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் விவசாயிகள் பாசனம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து கம்மாபுரம் அடுத்த சிறுவரப்பூர், கோட்டுமுளை, பெருவரப்பூர் உட்பட பல கிராம விவசாயிகள் குறைந்த பாசனத்தில் சாகுபடி செய்யக்கூடிய சவுக்கு பயிர் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

பெருவரப்பூர் விவசாயி சுந்தரம் கூறுகையில், " கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய பருவமழையின்றி இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. இதனால் விவசாயிகள் குறைந்த தண்ணீர் பாசனம் தேவைப்படும் சவுக்கு பயிருக்கு மாறி வருகின்றனர். மூன்று மாதங்களுக்கு முன், 18 ஏக்கரில் சவுக்கு நடவு செய்தேன். ஏக்கருக்கு 4 ஆயிரம் சவுக்கை கன்றுகள் போதுமானது. ஒரு முறை மட்டும் களை எடுத்து, இயற்கை தொழு உரமிட்டால் போதுமானது. மற்ற பயிர்களை விட பராமரிப்பு செலவு குறைவு. முன்றரை ஆண்டுகளில் அறுவடை செய்யலாம்' என்றார்.

## சாமந்தி பூ சாகுபடியில் லாபம் ஈட்டும் விவசாயிகள்

**தியாகதுருகம்**: தியாகதுருகம் பகுதியில் சாமந்தி பூ விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.சுழற்சி முறையில் பயிர்களை சாகுபடி செய்தால் மகசூல் அதிகரிக்கும். இதனால் விவசாயிகள் பல பயிர்களை சாகுபடி செய்கின்றனர். ஒரே பயிரை மீண்டும் பயிரிடுவதால் வளர்ச்சி பாதித்து மகசூல் குறைகிறது. இதனை தவிர்க்க மாற்று பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் மண்ணின் சத்துக்கள் பாதுகாப்பதோடு நல்ல பலனும் ஈட்ட முடிகிறது. இதனால் பாரம்பரியமான பயிர்களான கரும்பு, நெல், மஞ்சள், மரவள்ளி சாகுபடியை தவிர்த்து மற்ற பயிர்களில் கவனம் செலுத்துகின்றனர். இதில் பூ , காய்கறிகளும் நல்ல லாபத்தை விவசாயிகளுக்கு ஈட்டித் தருகின்றன. பராமரிப்பும், கூலியாட்கள் அதிகம் தேவைப்படுவதால் இவ்வகை பயிரில் ஆர்வம் காட்டாமல் ஒதுங்கி இருந்தனர். கடந்த 2 ஆண்டாக பருவ மழை பொய்த்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால் நெல், கரும்பு பயிரிட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் குறைந்த தண்ணீரை பயன்படுத்தி குறுகிய காலத்தில் பலன் தரும் பயிர்களுக்கு மாறி வருகின்றனர். இந்த வகையில் சாமந்தி பூ சாகுபடி தியாகதுருகம் பகுதியில் ஒரு சில விவசாயிகளால் விரும்பி செய்யப்டுகிறது. நடவு செய்த 60 நாட்களில் இருந்து பலன் கிடைக்கிறது. தினமும் ஆட்களை கொண்டு பூ பறித்து கடை காரர்களிடம் விற்கின்றனர். ஒரு ஏக்கரில் தினம் 40 கிலோ சாமந்தி பூ அறுவடை செய்யப்படுகிறது. சீசனை பொருத்து ஒரு கிலோ பூ குறைந்த பட்சமாக 25, அதிமாக 50 ரூபாய்க்கும் விற்கின்றனர். தற்போது இப்பகுதியில் சாகுபடி செய்த சாமந்தி செடிகளில் அதிக பூக்கள் பூத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இதன் மூலம் விவசாயிகள் கணிசமான வருவாய் ஈட்டி வருகின்றனர். மழை குறைந்து தண்ணீர் பற்றாக்குறையை பயன்படுத்தி சாமந்தி பூ சாகுபடி செய்து லாபம் ஈட்டி வருவதால் விவசாயிகள் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

## வளத்தி கமிட்டியில் நெல் வரத்து குறைந்தது

**அவலூர்பேட்டை**: வளத்தி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நெல் வரத்து குறைந்து போனது. மேல்மலையனூர் ஒன்றியத்தில் வளத்தி மற்றும் அவலூர்பேட்டையில் மார்க்கெட் கமிட்டிகள் உள்ளன. வளத்தியில் சேத்பட்-செஞ்சி மெயின் ரோடில் உள்ள மார்க்கெட் கமிட்டியில் நேற்று 015 ரக நெல் 30

மூட்டையும், பொன்னி 15 மூட்டை ஆக மொத்தம் 45 மூட்டை நெல் மட்டுமே விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வந்தனர். முதல்வர் ஜெ., இந்த மார்க்கெட் கமிட்டிக்காக இரண்டாயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு வசதியை ஏற்படுத்தி தந்துள்ளார். இதற்கு முன்னர் விவசாயிகளின் விளை பொருட்கள் மழை நேரத்தில் நனைந்து பாதிக்கப்பட்டன. தற்போது அனைத்து பாதுகாப்பு வசதிகளுடன் மிகப்பெரிய கிடங்கு வசதி உள்ளது. கடந்த ஜனவரி மாதத்தில் அதிகபட்சமாக 500 நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இங்கு விளை பொருட்களை ஒழுங்காக விற்பனை செய்ய வசதி உள் ளது என்பதை கிராம விவசாயி களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி விவசாயிகளை வரவழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். செஞ்சியில் நெல் மூட்டைகளை வைப்பதற்கு இடம் இல்லாத அள விற்கு விவசாயிகள் விளை பொருட்களை விற்பனைக்காக வாகனங்களில் கொண்டு செல்கின்றனர்.வளத்தியை சுற்றியுள்ள கிராமங்களில் வளத்தி மார்க்கெட் கமிட்டியின் சிறப்பம்சங்கள் குறித்து விளக்க வேண்டும். தற்போது மழை இல்லை என்று ஒரு புறம் சொன்னாலும் விவசாயிகள் வராமல் இருப்பதால் கமிட்டி களை இழந்துள்ளது. விவசாயிகளின் விளை பொருட்களை விற்பனை செய்யும் வகையில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு அதிகளவில் கிராம விவசாயிகளை வரவழைக்க அதிகாரிகள் முகாம் அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பாசன வாய்க்காலில் தண்ணீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

**லாலப்பேட்டை:** மேட்டூர் அணை நீர் மட்டம் கிடுகிடுவென குறைந்ததால், பாசனத்திற்கு தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது. இதனால் காவிரியில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்பட்டது.

காவிரியில் தண்ணீர் இல்லாததால் கரூர் மாவட்டத்தில் உள்ள மாயனூரிலிருந்து பிரியும், கட்டளைமேட்டு வாய்க்கால், தென்கரைவாய்க்கால், புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் ஆகிய மூன்று பாசன வாய்க்கால்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டு போயின. இதனால், பயிர் செய்யப்பட்ட வாழை, வெற்றிலை

கொடிக்கால், கரும்பு ஆகிய பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை ஏற்பட்டது. காயும் பயிர்களை காப்பாற்ற தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் மேட்டூர் அணையிலிருந்து குடிதண்ணீர் வசதிக்காக காவிரியில் வினாடிக்கு, 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் கடந்த, 1ம் தேதி இரவு திறக்கப்பட்டது. மேட்டூரில் திறந்து விடப்பட்ட தண்ணீர் மாயனூர் பழைய கட்டளை தடுப்பணைக்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்து குடிதண்ணீருக்காக பாசன வாய்க்கால்களிலும் தண்ணீர் விடப்பட்டது. இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கருகும் பயிர்களை காப்பாற்ற முடியும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோடை காலத்தில் குடிதண்ணீருக்காக தண்ணீர் காவிரியில் விடப்பட்டுள்ளதால் குடிதண்ணீர் தட்டுப்பாடும் குறையும். பாசன வாய்க்கால்களில் ஒரு மாதத்திற்கு பிறகு தண்ணீர் வந்ததால் மலர் தூவி விவசாயிகள் வரவேற்றனர். வாய்க்கால்களில் தொடர்ந்து தண்ணீர் வர வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## வெளிநாடுகளுக்கு பறக்கும் பெரியகுளம் மாவடு

**பெரியகுளம் :** பெரியகுளத்தில் இருந்து, அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட வெளிநாடுகளுக்கு மாவடு அனுப்பப்படுகிறது. பெரியகுளம் வனப்பகுதிகளில், "மாவடு' ஏப்ரல் மாதத்தில் கிடைக்கும். வனப்பகுதிகளில் எவ்வித பராமரிப்பின்றி, தானாக வளரும் மரத்தில் இருந்து விளைவது மாவடு, சுவையில் வேறுபடும். மாங்காய் பெருக்கும் தன்மை உடையது. மாவடு சிறிய அளவில் இருக்கும். அதன் காம்பிலும் சுவை தன்மை உண்டு. "மாதா ஊட்டாத சோறு மாவாடுகாய் ஊட்டும்', என்ற சொல் வழக்கு உண்டு சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, துபாய் உட்பட வெளிநாடுகளுக்கும், புதுச்சேரி, கேரளா, ஆந்திரா, பீகார் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும், சென்னை, மதுரை, ராமநாதபுரம் உள்ளிட்ட

வெளிமாவட்டங்களுக்கும், பெரியகுளம் பகுதியில் இருந்து மாவடு அனுப்பப்படுகிறது. இதனை ஆண்டு முழுவதும், ஊறுகாயாக பதப்படுத்தி சாப்பிடுவர். பக்குவமாய் உபயோகித்தால், ஒன்றரை ஆண்டுகள் வரை கெடாமல் இருக்கும். மாவடு ஒரு மரக்கால் (4 படி) 400 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனையாகிறது. மாவடு முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இந்தாண்டு மாவடு விளைச்சல் குறைவு, என விவசாயிகள் தெரிவித்தனர்.

### மொபைல் போனில் வழிகாட்டி தகவல்கள்

**தேனி** : ஓடைப்பட்டி, கம்பம், கூடலூர் பகுதிகளில் 6000 ஏக்கரில் திராட்சை சாகுபடி நடக்கிறது. இங்கு ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சை சாகுபடி செய்வது குறித்த ஆய்வு நடந்து வருகிறது. மகாராஷ்டிரா மாநிலம், புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், இதற்காக தேனி மாவட்டத்தில் உள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு வந்து சென்றுள்ளனர். இது குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கம்பம், ஒடைப்பட்டி பகுதிகளில் திராட்சை சாகுபடியின் தரத்தை அதிகளவு உயர்த்த வேண்டி உள்ளது. இதற்கு சரியான வழிகாட்டுதல்களை தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் வழங்கி வருகிறது. திராட்சையில் அதிக விளைச்சல், நோய் தடுப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் மூலம் விவசாயிகளுக்கு,மொபைல் போனில் காலநிலை, மற்றும் ஒவ்வொரு காலநிலைக்கும், ஒவ்வொரு வளர்ச்சி நிலைக்கும் தேவையான வழிகாட்டி தகவல்கள் வழங்கப்பட உள்ளன. இந்த தகவல்களின் அடிப்படையில், சாகுபடி செய்யும் விவசாயிகள் வேதிப்பொருட்களின் அளவை குறைத்து, பழத்தின் தரத்தை அதிகரிக்கலாம். நச்சுத்தன்மை இல்லாத பழங்களை மட்டுமே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். தரமான ஒரு கிலோ திராட்சை, வெளிநாடுகளில் கிலோ 600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்கள் பழங்களின் தரத்தை அறிய, தேசிய ஆராய்ச்சி மையத்தின் வேதியியல் பிரிவு அலுவலகத்தை அணுகலாம், என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேங்காய் பருப்பு ஏலம் கிலோவுக்கு ரூ.5.65 லாபம்



**ஜலகண்டாபுரம்** : ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 4.5 டன் தேங்காய் பருப்பு ரூ.4.26 லட்சத்திற்கு விற்பனையானது.ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு நேற்று தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது. இதில் விவசாயிகள் 98 மூட்டைகளில் 4,551 கிலோ தேங்காய் பருப்புகளை கொண்டு வந்தனர்.

சென்ற வாரம் குறைந்த பட்சமாக கிலோ ரூ.85 க்கும் அதிகபட்சமாக ரூ.91.30க்கும் ஏலம் விடப்பபட்டது.

இந்த வாரம் குறைந்த பட்சமாக கிலோ ரூ.92.85 க்கும் அதிகபட்சமாக கிலோ ரூ.96.95க்கும் ஏலம் விடப்பபட்டது.

இதன் மூலம் ரூ.4 லட்சத்து 26 ,085 க்கு வர்த்தகம் நடைபெற்றது.

சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு ரூ.5.65 அதிகம் கிடைத்தது.

**முட்டை உற்பத்தி 10% சரிந்தது**



**நாமக்கல்** : நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு(என்இசிசி) தலைவர் டாக்டர் செல்வராஜ் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மண்டலத்தில் கடந்த மார்ச் 1ம் தேதி ரூ.3.45ஆக இருந்த முட்டை கொள்முதல் விலை படிப்படியாக சரிந்து, கடந்த வாரம் ரூ.2.40 ஆக நிர்ணயிக்கப்பட்டது. ராமநவமி நேற்று முடிவடைந்ததை தொடர்ந்து, வட மாநிலங்களில் விலை உயர தொடங்கியிருப்பதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டைக் கொள்முதல் விலை 2 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. வரும் நாட்களில் இந்த விலை மேலும் அதிகரிக்கும்.பர்வாலா, டில்லி, கொல்கத்தாவில் ராமநவமி விழா முடிவதையொட்டி, முட்டை நுகர்வு சீராகி கொள்முதல் விலையும் உயர்ந்து வருகிறது. கோடை வெயில் காரணமாக, நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தி 7 முதல் 10 சதம் வரை குறைந்துள்ளது.நுகர்வு அதிகரிக்கும் நிலையில், உற்பத்தி குறைந்து வருவது முட்டை கொள்முதல் விலை வரும் நாட்களில் மேலும் உயரக் கூடும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஆந்திராவில் இருந்து இறக்குமதிகோடை வெயிலின் தாக்கம் சூடுபிடித்தது இளநீர் விற்பனை**

**வேலூர்**,:வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் வேலூரில் இளநீர் விற்பனை சூடுபிடித்துள்ளது. இதனால் வியாபாரிகள் ஆந்திராவில் இருந்து இளநீர் இறக்குமதி செய்து விற்பனை வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் தண்ணீரின்றி காடுகள், மலைகள் மற்றும் விவசாய நிலங்கள் வறண்டு

காணப்படுகின்றன. குடியாத்தம், பள்ளிகொண்டா, திருப்பத்தூர், லத்தேரி ஆகிய பகுதிகளில் தென்னை அதிகளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. நீரின்றி தென்னை மரங்கள் காய்ந்து வருகிறது. இதனால் இளநீர் உற்பத்தி குறைந்து வருகிறது.

கோடை காலம் தொடங்கும் முன்பே வேலூர் மாவட்டத்தில் வெயில் வட்டிவதைக்க தொடங்கி விட்டது. கடந்த சில நாட்களாக 104 டிகிரிக்கு மேல் வெயில் சுட்டெரிக்கிறது. இதனால் பொதுமக்கள் வெயில் நேரத்தில் தாகத்தை தீர்த்துக்கொள்ள பழச்சாறு கடைகள், தர்பூசணி, இளநீர் மற்றும் கூழ் கடை உள்ளிட்ட இடங்களை நாடி செல்கின்றனர்.

இதனால் தர்பூசணி, இளநீர், கூழ்உள்ளிட்ட கடைகளில் வியாபாரம் ஜோராக நடந்து வருகிறது. அதேபோல் வெயில் சூட்டை தணிக்க அதிகஅளவில் இளநீர் வாங்கி குடிக்கின்றனர்.

இதனால் அனைத்து இடங்களிலும் இளநீர் வியாபாரம் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இதற்கிடையே வேலூர் மாவட்டத்தில் இளநீர் உற்பத்தி குறைந்து வருவதால் வியாபாரிகள் ஆந்திரா மாநிலத்தில் இருந்து இளநீர்களை இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றனர்.

இவற்றின் விலை ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் அதிகமாக இளநீர் கடைகளை நாடிவருகின்றனர். இதனால் விற்பனை சூடுபிடித்துள்ளது.

**ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் முதல் தர கொப்பரை கிலோ ரூ 102க்கு ஏலம்**

**ஆனைமலை,** : பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று கொப்பரை ஏலம் நடந்தது. ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், கோட்டூர், ஆழியார், ஒடையகுளம், அம்பராம்பாளையம், சமத்தூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, 93 விவசாயிகள் மொத்தம் 235 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். இதல் 155 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 80மூட்டை இரண்டாம் தர கொப்பரையாகவும் தரம்

பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது. முதல் தர கொப்பரை ரூ.99.50முதல் ரு.102.75 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ரூ.90.50 முதல் ரூ.96.50 வரையிலும் ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த மொத்தம் 13 டன் கொப்பரை ரூ.12.48லட்சத்துக்கு ஏலம்போனது. இதை 4வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். கடந்த வாரத்தை விட இந்த வாரம் விவசாயிகள் கொண்டுவந்த கொப்பரையின் அளவு அதிகமாக இருந்தது. மேலும் அதிகபட்சமாக ரூ.15 முதல் ரூ.17 வரை என விலை உயர்ந்துள்ளது.

ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் கூறுகையில், ‘வெளிமார்க்கெட்டில் ஆயில் விலை தொடர்ந்து உயர்வால் கொப்பரை விலையும் உயர்ந்துள்ளது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இதுவரை அதிகபட்சமாக ஒருகிலோ கொப்பரை ரூ.85வரை ஏலம்போனது. ஆனால், இன்று(நேற்று) நடந்த ஏலநாளில் ஒருகிலோ அதிகபட்சமாக ரூ.102க்கு ஏலம்போனது. இதனால் விவசாயிகள்மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஒருங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.102க்கும் அதிகமான விலைக்கு கொப்பரை ஏலம் போனது இதுவே முதல்முறையாகும்‘ என்றார்.

**சீசன் முடிவடைந்ததால் ஆரஞ்சு விலை உயர்ந்தது**

**கோவை,** :ஆரஞ்சு சீசன் முடிவடைந்துள்ளதால் கடந்த மாதத்தில் 1 கிலோ ரூ.50க்கு விற்கப்பட்ட ஆரஞ்சு ரூ.30 அதிகரித்து ரூ.80க்கு விற்கப்பட்டது. கோவை உக்கடம் பழமார்க்கெட்டுக்கு நாக்பூர், ஆந்திரா பகுதிகளில் இருந்து ஆரஞ்சு பழங்கள் வருகின்றன. நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை ஆரஞ்சு பழம் சீசன் அமோகமாக இருந்ததால், கடந்த மாதங்களில் சராசரியாக 30 முதல் 40 டன் வரை கோவை பழமார்க்கெட்டுக்கு வரத்து இருந்தது. இந்நிலையில், தற்போது சீசன் முடிவடைந்துள்ளதால், ஆரஞ்சு விளைச்சல் பெருமளவு குறைந்து சராசரியாக 15 டன் அளவே ஆரஞ்சு வரத்து உள்ளது. இதன் எதிரொலியாக விலை அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் 1 கிலோ ரூ.50க்கு விற்கப்பட்ட ஆரஞ்சு நேற்றைய நிலவரப்படி ரூ.30 அதிகரித்து ரூ.80க்கு விற்கப்பட்டது. அதேபால், சாத்துக்குடி வரத்து குறைந்துள்ளதால் கடந்த மாதத்தில் 1 கிலோ ரூ.40க்கு விற்கப்பட்ட சாத்துக்குடி ரூ.10 அதிகரித்து ரூ.50க்கு விற்கப்பட்டது.

**நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை வேளாண்துறை ஆலோசனை**

**பழநி**, : நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண் ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன.

தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேரில் எண் ணெய் வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையி லும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும். இதன் விளைச்சல் ஹெக்டேருக்கு 2.15 டன்னாக உள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை மானாவாரியில் பயிரிட ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, ஜூலை-ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. நிலக்கடலை பயிரிட பாத்தி அமைத் தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண்துறையினிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.

அதுபோல் பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும்.

விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டிமீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும்.

ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4 சதவீதம், கார்பாரில் 10 சதவீதம் பெனிட்ரோதியான் 2 சதவீதம் ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 ஹொக்டேருக்கு சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில்

கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது.

இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பண்ருட்டி பகுதியில் போதிய மழை இல்லாததால் பலாப்பழம் விளைச்சல் பாதிப்பு விவசாயிகள் கவலை**



**பண்ருட்டி,**

பண்ருட்டி பகுதியில் போதிய மழை இல்லாததால் பலாப்பழம் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**முந்திரி மரங்கள்**

முந்திரி மற்றும் பலாப்பழத்துக்கு பெயர் போன இடம் பண்ருட்டி ஆகும். ஒவ்வொரு ஆண்டும் முந்திரி, பலா உள்ளூர் மட்டுமின்றி வெளியூர், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு

வீசிய தானே புயலால் பண்ருட்டி பகுதியில் முந்திரி, பலா விளைச்சல் அடியோடு பாதிக்கப்பட்டது. இதனால், அப்பகுதி விவசாயிகள் முற்றிலும் பாதிப்பு அடைந்தனர்.

இதனை தொடர்ந்து, வேளாண் அதிகாரிகள், மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் மெல்ல, மெல்ல விவசாயிகள் பழைய நிலைக்கு திரும்பி வருகின்றனர். இந்நிலையில், நடப்பு ஆண்டில் முந்திரி சீசன் தொடங்கியதன் காரணமாக முந்திரி மரங்களில் அதிகளவில் பூக்கள் பூக்க தொடங்கியது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால், இரவில் பனிப்பொழிவும், பகலில் வெயிலின் தாக்கமும் அதிகமாக இருந்ததன் விளைவாக பல இடங்களில் முந்திரி மரங்களில் பூச்சி தாக்குதல் மற்றும் பூக்கள் கருகியது. இதனை விவசாயிகள் வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையின் பெயரில் சரிசெய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## பலா சீசன்

மேலும் பண்ருட்டி அருகே காடாம்புலியூர், மேல்மாம்பட்டு, முத்தாண்டிக்குப்பம், பணிக்கன்குப்பம், வேகாக்கொல்லை, கீழக்குப்பம், காட்டுகூடலூர், சாத்திப்பட்டு, பலாபட்டு, மேலிருப்பு, குடியிருப்பு, மேல்மாம்பட்டு, சிறுதொண்டமாதேவி உள்பட ஏராளமான கிராமங்களில் விவசாயிகள் சுமார் 7 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் பலா பயிர் செய்துள்ளனர். நடப்பாண்டில் பண்ருட்டி பகுதியில் பலாப்பழ சீசன் தொடங்கியதை அடுத்து, தானே புயலில் தப்பிய மரங்களில் இருந்து பலாப்பழங்களை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். அறுவடை செய்யப்பட்ட பலாப்பழங்கள் மும்பை, ஆந்திரா, கர்நாடகம், புதுச்சேரி உள்பட வெளிமாநிலங்களுக்கு லாரி மூலம் ஏற்றுமதி செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றன. போதிய மழை இல்லாததால் பலா மரத்தில் பழங்கள் குறைந்த அளவிலேயே காய்த்து உள்ளது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## விளைச்சல் பாதிப்பு

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், தானே புயலால் பண்ருட்டி பகுதியில் பயிரிடப்பட்ட ஏராளமான பலா மரங்கள் பலத்த சேதம் அடைந்தன. புயலில்

பாதிப்பு அடைந்த பலா மரங்கள் ஒரளவுக்கு துளிர்விட்டு வளர்ந்து வருகிறது. இதன் காரணமாக கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் வருமானம் சிறிது அதிகரிக்கும் என விவசாயிகளான நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் பருவமழை குறைவு மற்றும் கடும் வெயில் காரணமாக நடப்பாண்டில் பலாப்பழம் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து உள்ளனர். ஆனால் மோட்டார் பாசன வசதி உள்ள இடங்களில் மட்டும் பலாப்பழங்கள் நன்கு காய்த்துள்ளன. மற்ற மானாவாரி நிலங்களில் உள்ள மரங்களில் எதிர்பார்த்த அளவிற்கு பலா விளைச்சல் இல்லை. என்றார்.

**சிவகாசியில் பலத்த சூறைக்காற்று 500 வாழை மரங்கள் சாய்ந்தன**



சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் மற்றும் அதிவீரன்பட்டி ஆகிய இடங்களில் நேற்று மாலை சுமார் 4 மணி அளவில் பலத்த சூறாவளிக் காற்று வீசியது. இதில் அந்தப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த சுமார் 500 வாழை மரங்கள் சரிந்து விழுந்தன. இது குறித்து தகவல்அறிந்த வருவாய் துறையினர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர். சிவகாசி சுற்றுப் பகுதியில் 5 நிமிடம் மட்டும் லேசான சாரல் மழை பெய்தது. இதே போல் சாத்தூர் பகுதியிலும் சுமார் அரை மணி நேரம் சாரல் மழை பெய்தது

**கொடைக்கானலில் மழை: பிரையண்ட் பூங்காவில் பூக்கள் பூக்க தொடங்கின**



**கொடைக்கானல்,**

கொடைக்கானல் பகுதியில் 2 நாட்கள் பெய்த மழையின் காரணமாக பிரையண்ட் பூங்காவில் பூக்கள் பூக்க தொடங்கி உள்ளன.

**<u>பூக்கள் பூக்க தொடங்கின</u>**

மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானல் நகரில் குளு,குளு தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 5–ந் தேதி கொடைக்கானல் நகரில் ஆலங்கட்டி மழை பெய்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவும் பலத்த மழை பெய்தது. சுமார் அரை மணி நேரம் இந்த மழை நீடித்தது.



இந்த மழை காரணமாக கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் பூக்கள் பூக்க தொடங்கி உள்ளது. குறிப்பாக பேன்சி,டெல்பீனியம் போன்ற பூக்கள் அதிகளவில் பூத்துள்ளது. இதனை சுற்றுலா பயணிகள் ரசித்து வருகின்றனர். இதே நிலை

நீடித்தால் அடுத்த வாரத்திற்குள் அனைத்து பூக்களும் பூக்க தொடங்கி விடும் என்று பிரையண்ட் பூங்கா அதிகாரிகள் கூறினர்.

**<u>சுற்றுலா பயணிகள் வருகை</u>**

சமீபத்தில் 2 நாட்கள் பெய்த மழை காரணமாக பகல் நேரத்தில் வெப்பம் நிலவினாலும் பிற்பகல் முதல் மேகமூட்டம் நிலவி நகரில் குளுமையான சூழல் நிலவுகிறது. இதை ரசிக்க சுற்றுலா பயணிகள் வரத் தொடங்கி உள்ளனர். தேர்தல் மற்றும் பள்ளிக்கூட தேர்வுகள் முடிந்த பின்னர் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு சான்றாக அடுத்த மாதம்(மே) முழுவதும் கொடைக்கானல் நகரில் உள்ள பல்வேறு ஓட்டல்களில் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு ஆர்வத்துடன் முன்பதிவு செய்து வருகின்றனர்.

**தேங்கி நிற்கும் தண்ணீரில் துர்நாற்றம் 28 அடியாக குறைந்தது வைகை அணை நீர்மட்டம் கோடை மழை கை கொடுக்குமா?**



**ஆண்டிப்பட்டி,**

வைகை அணையின் நீர்மட்டம் 28 அடியாக குறைந்துள்ளதால் தேங்கி யிருக்கும் தண்ணீரில் இருந்து துர்நாற்றம் வீசி வருகிறது. இதனால் கோடை மழை கைகொடுக் குமா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

<u>28 அடியானது</u>

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை மாநகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. 2 ஆண்டுகளாக மழை பெய்யாத தால் 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட் டம் வேகமாக சரிந்து வருகிறது. கடந்த 50 நாட்களுக்கும் மேலாக அணைக்கு நீர்வரத்து இல்லாத நிலையில் நேற்று அணையின் நீர்மட்டம் 28 அடியாக குறைந்தது. வைகை அணையில் இருக்கும் தண்ணீர் குடிநீர் தேவைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. கோடை வெயில் கொளுத்தி வரும் நிலையில் அணையின் நீர்மட்டம் கிடு, கிடுவென குறைந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட் களாக தேனி மாவட்டத்தில் மாலை நேரத்தில் வானத்தில் இடி, மின்னலுடன் மேகங்கள் கூடுவதும், மழை பெய்யாமல் ஏமாற்றுவதுமாக போக்கு காட்டி வருகிறது. நேற்று தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தபோதிலும், வைகை அணையின் நீர் பிடிப்பு பகுதிகளான மூலவைகை ஆற்று பகுதிகளில் மழை பெய்யவில்லை.

துர்நாற்றம்

வெயிலின் தாக்கம் அதி கரித்து காணப்படும் நிலையில் கோடைமழை கைகொடுத் தால் மட்டுமே வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்படும். இதற்கிடையே அணையில் தேங்கி இருக்கும் தண்ணீரில் ஒரு வித துர்நாற்றம் வீச தொடங்கி உள்ளது. அணை யில் நீர்மட்டம் குறையும்போது, மீன்கள் மற் றும் பாசிகளால் இதுபோன்ற துர்நாற்றம் வீசுவதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்றைய நிலவரப்படி வைகை அணையின் நீர்மட் டம் 27.89 அடியாக காணப் பட்டது. அணைக்கு நீர்வரத்து இல்லாத நிலையில் மதுரை, சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக அணையில் இருந்து வினாடிக்கு 40 கனஅடி தண்ணீர் திறக்கப் பட்டு வருகிறது. அணையின் மொத்த நீர் இருப்பு 292 மில்லியன் கனஅடியாக உள் ளது. இதேபோல முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 110.10 அடியாக காணப்படுகிறது. நீர்வரத்து வினாடிக்கு 100 கனஅடியாக வும், அணையில் இருந்து வினாடிக்கு 100 கனஅடி தண் ணீரும் திறக்கப்பட்டுள்ளது. அணையின் மொத்த நீர் இருப்பு 927 மில்லியன் கன அடியாக காணப்படுகிறது.